## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.26/2011

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 04.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பானுமதி (DW–1 ) | வயது | : | 65 /2026 |
| க/த பெயர் | : | திரு. இளங்கோவன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து எனது தகப்பனார் சிங்காரவேலு பத்தருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் 2021 இல் இறந்தார். எனது அம்மா பெயர் என்னவென்றால் மீனாட்சி. மீனாட்சி சிங்காரவேலு பத்தர் இறப்பதற்கு முன் இறந்தாரா என்றால் ஆமாம். சிங்காரவேலு பத்தருக்கு நானும் 1ம் பிரதிவாதியும் வாரிசுதாரர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சேகருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. 1ம் பிரதவாதியின் மனைவி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கும்பகோணம் பக்கத்தில் உள்ள ராமானுஜபுரம். சேகருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்கள் இப்போது எங்கு உள்ளார்கள் என்றால் கோயமுத்தூரில் உள்ளனர்.
2) தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் இறப்பதற்கு முன் எனக்கு ஏதேனும் ஆவணங்கள் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. சிங்காரவேலு பத்தர் குடியிருந்த வீடு தற்போது யாரிடம் உள்ளது என்றால் சேகர் குடியிருந்தார் தற்போது வேறு யாரோ குடியிருந்து வருகிறார்கள். அந்த வீடு எங்கு உள்ளது என்றால் கம்மாளத்தெருவில் உள்ளது. அந்த வீட்டில் பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.
3) தாவா சொத்து மற்றும் சிங்காரவேலு குடியிருந்த வீட்டில் எனக்கும் 1ம் பிரதிவாதி சேகருக்கும் சம பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், வேங்கைபுரத்தில் உள்ளது. தாவா சொத்து தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் வயலாக இருந்தது தற்போது என்ன நிலையில் உள்ளது என்று தெரியாது.

எனது தகப்பனார் காலத்திற்கு பின்பு நாங்கள் தாவா சொத்திற்கு சென்று அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) சிங்காரவேலு உயிருடன் இருந்தபோது ஜெயராமனுக்கு தாவா சொத்தை விற்பதற்கு கிரய ஒப்பந்தம் செய்ததாக சொல்லி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஜெயராமன் உயிருடன் இருந்தபோது சிங்காரவேலு இறந்தபின்னர் தாவா சொத்தை ஜெயராமனுக்கு விற்பனை செய்ய கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படையல் வாரிசுதாரர் என்ற முறையில் நாங்கள் கிரயம் எழுதி கொடுக்க வேண்டி சட்ட அறிவிப்பை ஜெயராமன் அனுப்பினார் என்றால் இல்லை. மேற்கண்ட அறிவிப்பிற்கு நாங்கள் பதில் அறிவிப்பு கொடுத்தோம் என்றால் இல்லை.

5) சிங்காரவேலு உயிருடன் இருந்தபோது ஜெயராமனுக்கு தாவா சொத்தை விற்பதற்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததாக வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணமாக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள விபரம் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அது பொய்யானது. சிங்காரவேலு பத்தர் உயிருடம் இருக்கும்போது கடைத்தெருவில் பஞ்சாயத்துகள் செய்து வந்த வகையிலும், வர்த்தக தலைவர் என்ற வகையிலும் நிறைய ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ–1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து இல்லை என்பதை மறுக்கும் விதமாக வேறு ஆவணங்களில் உள்ள கையெழுத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பொய்யாக எழுதப்பட்டதாக சொல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேலும் அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்தை கைரேகை நிபுணர் மூலம் நிரூபணம் செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யும் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது அப்பா ஜெயராமனுக்கு எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த ஆவணம் வா.சா.ஆ.1 உண்மை என்பதால் தான் மேற்கண்ட நடவடிக்கைகள் நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

7) வேங்கைபுரத்தில் எனது அப்பாவிற்கு தாவா சொத்தை தவிர இதர சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை ஜெயராமன் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் எனது அப்பாவிற்காக சாகுபடி செய்து வந்து நெல்லை கொண்டு வந்து எனது அப்பாவிடம் கொடுத்துவிடுவார். அந்த வகையில் எனது அப்பாவிற்கும் ஜெயராமனுக்கும் நெருக்கம் இருந்தது

என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் தாவா சொத்தை எனது அப்பா சாகுபடி செய்ய முடியாது என்பதால் ஜெயராமன் கிரயம் வாங்கி கொள்ள வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வசப்பரிகாரம் வேண்டி அசல் வழக்கு எண்.43/2023 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்து வாரிசு முறையில் எங்களுக்கு சொந்தமானது என்று வசப்பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தனாது எனக்கும் 1ம் பிரதிவாதி சேகருக்கும் சொந்தமாக உள்ள சொத்து என்றால் சரிதான்.

**வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்களை பரிசீலனை செய்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 16:19:16 +0530

District Munsif
Mannargudi.